சோபக்ருத் ஸூ ஐப்பசி மீ
அக்டோபர் - நவம்பர் 2023

மலர்: 6
இதழ்: 7

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:

## SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





அம்ருதோத்ஸவம்



சோபக்ருத் ஹு ஐப்பசி மீ
அக்டோபர் - நவம்பர் 2023

மலர்: 6
இதழ்: 7

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand, Thillai Ranganathan & Koteeswaran
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

நம் ஆசார்ய வள்ளல், தம் ஸம்ப்ரதாயத்தை 'யதீந்த்ர-மாஹானஸிக ஸம்ப்ரதாயம்' என அழைத்துப் பெருமிதம் கொள்வர். காரணம், அவர் பேச்சில் மடைப்பள்ளி வந்த மணம் (ஸ்ரீபாஷ்யகாரருக்கு திருமடைப்பள்ளி கைங்கர்யம் செய்தவாறே, அனைத்து ரஹஸ்யார்த்தங்களையும் சிந்தாமல் கொண்ட ஸ்ரீ ப்ரணதார்த்தி ஹரரின் கருத்துக்களை ப்ரதிபலிப்பவை) அவர்தம் வார்த்தையுள் மன்னியதே.

நம் தூப்புல் தேசிகனின் திருக்கோயிலில் நடந்தேறிய **அம்ருதோத்ஸவம்,** இப்பொருளை நம்போன்ற 'புபுக்ஷுகளுக்கு' விளங்கவைக்கும் ஒரு விழாப் போலும்,!

ஆசார்யவள்ளல், நித்ய-மங்களாசாஸனம் செய்யத் தோதாக திருமயிலையில் நித்ய ஸாந்நித்யம் கொண்டு வீற்றிருக்கும் ஸ்ரீநிவாஸப் பெருமானின் ப்ரதிஷ்டா தின சதமான வர்ஷ உத்ஸவாங்கமாக இவ்வாண்டு முழுதும் ப்ரதி மாதம் ஒரு விசேஷ உத்ஸவம் செய்தருள ஸங்கல்பித்துக்கொண்டார். திருத்தெப்போத்ஸவம் - அல்லிக்கேணி விஜயயாத்ரா – பலோத்ஸவம் - புஷ்போத்ஸவம் என்கிற கணக்கில், இந்த புரட்டாசியில் **சப்பன்-போக் என்ற அம்ருதோத்ஸவம்** மிக விசேஷமாக நடந்தேறியது. இதன் கண், ஸ்ரீஅலர்மேல்மங்கை ஸமேதனான ஸ்ரீஸ்ரீநிவாஸனுக்கு 56-வகை திருப்பணியாரங்கள் கண்டருளப்பட்டன. இவ்வுத்ஸத்தின் வைகரியை, பக்ஷண வைகரி - பக்ஷகனின் வைகரி - பக்ஷகர்களின் வைகரி என சிறிது அசை போடுவோம்.

பக்ஷண வைகரி:- பணியாரங்கள் அனைத்தும் கோயில் வளாகத்திலேயே திருமடைப்பள்ளி நாச்சியார் முன்பாகவே பத்துக்கும் மேற்பட்ட பரிசாரகர்களால், 'சுத்த பாவம் கதோ பக்த்யா' என்றபடி ச்ரத்தையுடன் படைக்கப்பட்டவை.

பக்ஷகனின் வைகரி:- புஷ்பங்களாலும் விளக்குகளாலும் நன்கு அலங்கரிக்கப்பட்ட வாஹன மண்டபத்தில், உலகமுண்ட பெருவாயனான திருவேங்கடத்து எம்பெருமான் வெண்ணெய் உண்ட வாயன் திருக்கோலத்தில் எழுந்தருளி அமுது செய்தபடி .

பக்ஷகர்களின் வைகரி:- அந்தரத்தமரர்கள் கூட்டங்கள் இவையோ ! அந்தரம் பார் இடமில்லை மற்றிதுவோ!! சுந்தரர் நெருக்க, விச்சாதரர் நூக்க!!! என்னலாம் படியான அடியார்கள் குழாம், பக்ஷண-பக்ஷகனை ஸேவித்து அக மகிழ்ந்தனர். பிறகு அநுயாகத்திற்காக 'எள் போட்டால் எள் விழாது'; இல்லையில்லை 'பக்ஷணம்போட்டால் பக்ஷணம் விழாது'. அப்படி வளாகம் முழுவதும் – கருட மண்டபமென்ன, வஸந்த மண்டபமென்ன, 16-கால் மண்டபமென்ன, ப்ரதான வாஹந மண்டபமென்ன – வரிசையாக அமர்ந்திருந்தனர். பரிசாரகர்கள் அனைத்து ப்ரஸாதங்களையும் ஸபாத்ரம் விநியோகித்து அகமகிழ்ந்தனர்.

வாருங்கள் சாப்பிடுவோம். நேரில் வர இயலாதவர்கள் இவ்வுத்ஸவத்தின் நிழற்படங்கள் இந்த ஸஞ்சிகை மூலம் கண்ணால் பருகலாம்.

ஸ்வாமி தேசிகனும், **மடைப்பள்ளி வந்த மணம்** என அகமகிழ்ந்தார்; திருக்கோயில் அதிகாரிகளும் அக்கைங்கர்யபரர்களுக்கு கோஷ்டியிலேயே புஷ்கலமாக ஸம்பாவனை செய்தனர்.

அனைத்துக்கும் மேலாக, நேரில் ஸேவித்த ஸேவார்த்திகள்!

ஶ்ரீ:

# Sweet Memories To Savour Forever

## FROM THE DESK OF TRUSTEES



With the divine ordain of our Divya Dampathis and the blessings of Swami Desikan, we find ourselves in the midst of a year-long Sathamana Mahotsavam celebration. In the first half of this Vaibhavam, we organised several unique festivals, including a few that were held for the first time in the history of our temple. These included Theppotsavam, Brindaranya Kshetra Vijayotsavam, and now Amruthotsavam.

The grand celebration of **Amruthotsavam** marked a significant milestone for our temple, and it was celebrated with great enthusiasm. On this special day, **56 varieties of Prasadams (Bhakshanams)** were offered to the Divya Dampathis and distributed to all devotees. We express our sincere gratitude to the Kainkaryaparas, especially the ones in the Madaippalli who tirelessly prepared and distributed the Prasadams with unwavering commitment.

This is a time when devotees from far and wide come together to pay their respects, participate in religious ceremonies, and seek blessings, and it exceeded our expectations in terms of participation, devotion, and overall success. Volunteers worked with commitment to ensure the smooth flow of.

Sri Damal Ramakrishnan delivered an enlightening discourse, providing devotees with profound insights into the spiritual significance of the event. The Amruthotsavam witnessed an overwhelming turnout of devotees, and the feedback received from them has been exceedingly positive, with many expressing their gratitude for the memorable, sweet, and spiritually enriching experience.

We extend our heartfelt thanks to all the devotees, volunteers, donors, and well-wishers who contributed to the success of the Amruthotsavam. Without their dedication and support, this event would not have been possible.

The success of the grand event has inspired us to continue our efforts in serving the community and fostering spiritual growth. We are excited about the upcoming events and initiatives that will further strengthen our temple's role in the community.

For the month of Aippasi, we have an important festival termed **Dolotsavam (Oonjal)** planned for our Perumal and Thayar on Saturday, November 11. The Dolotsavam will feature special music. In addition to this, the usual festivals of Deepavali, Annakoota Utsavam, Mahanavami, Senainathan Satrumurai, Poigai Azhwar, Bhoothathazwar, and Pezhahwar Satrumurai will also be celebrated.

Last month, Sri Desikan Utsavam and Pavithrotsavam were also conducted with divine fervour. As usual, Pavithrotsavam was conducted with Homam along with Ubhaya Veda Parayanam. His Holiness Srimath Azhagiyasingar Sri Ranganatha Yathindra Mahadesikan offered Mangalasasanam on the penultimate day and also participated in the Aruli-cheyal Goshti Thodakkam during the procession.

We look forward to your continued support as we embark on future endeavors to serve the spiritual and social needs of our community.

# சோபக்ருத் வருட ஐப்பசி மாத பஞ்சாங்கம் - 2023

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| அக்டோபர் / நவம்பர் | ஐப்பசி | | | | | |
| 18/10/2023 | 1 | சதுர்த்தி | புதன் | அனுஷம் | நவராத்ரி 4ம் நாள். காலை பெருமாள், தாயார், திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 3ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | நவராத்ரி: ஸ்ரீ N.R.S. ராமக்ருஷ்ணன் குடும்பத்தினர் |
| 19/10/2023 | 2 | பஞ்சமி | வியாழன் | கேட்டை | நவராத்ரி 5ம் நாள். காலை பெருமாள், தாயார், திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 5ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு திருமஞ்ஜனம், மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | நவராத்ரி: ஸ்ரீ M.K.R. குடும்பத்தினர் |
| 20/10/2023 | 3 | ஷஷ்டி | வெள்ளி (1) | மூலம் | நவராத்ரி 6ம் நாள். காலை பெருமாள், தாயார், திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 5ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு, திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | நவராத்ரி: ஸ்ரீ ராகவன் |
| 21/10/2023 | 4 | ஸப்தமி | சனி | பூராடம் | நவராத்ரி 7ம் நாள். காலை பெருமாள், தாயார், திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 6ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை, சேனைநாதன் திருநக்ஷத்ரம் காலை பெருமாள், சேனைநாதன் வீதி புறப்பாடு, திருமஞ்ஜனம், ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | நவராத்ரி: ஸ்ரீ K.S. ஸேதுராமன் குடும்பத்தினர். ஸேனைநாதன் உத்ஸவம்: ஸ்ரீமதி ஷோபனா ராமரத்தினம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22/10/2023 | 5 | அஷ்டமி | ஞாயிறு | உத்தராடம் | நவராத்ரி 8ம் நாள். காலை பெருமாள், தாயார், திருமஞ் ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 7ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு திருமஞ்ஜனம், மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை. ஸ்வாமி தேசிகன் 27ம் நாள் விடாயாற்றி உத்ஸவம். காலை தேசிகன் திருமஞ்ஜனம். மாலை புஷ்ப பல்லக்கு வீதி புறப்பாடு. பொழுதுடன் திருவாராதனம் | நவராத்ரி: ஸ்ரீமதி அலமேலு ராமபத்ரன். விடாயாற்றி உத்ஸவம்: ஸ்ரீ T. ஸ்ரீனிவாசன் – ஸ்ரீ S. பரத்வாஜ். புஷ்ப பல்லக்கு: ஸ்ரீ P.V. ராகவன் பண்ட், ஸ்ரீ மது தேசிகன் குடும்பத்தினர் |
| 23/10/2023 | 6 | நவமி | திங்கள் | ச்ரவணம் | நவராத்ரி 9ம் நாள். காலை பெருமாள், தாயார் திருமஞ் ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 8ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு, திருமஞ்ஜனம், மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு திருவாய்மொழி ஸேவாகாலம், சாத்துமுறை. பொய்கை ஆழவார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், தேசிகன், பொய்கை ஆழ்வார் வீதி புறப்பாடு, திருமஞ்ஜனம். ஆஸ்தானம், ஸேவாகாலம் | நவராத்ரி: ஸ்ரீ S. நாராயணன் குடும்பத்தினர் – ஸ்ரீ T. நாராயணன் குடும்பத்தினர். பொய்கை ஆழ்வார் திருநக்ஷத்ரம் – ச்ரவணம் ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர் |
| 24/10/2023 | 7 | தசமி | செவ்வாய் | அவிட்டம் | பேயாழ்வார் உத்ஸவம் 9ம் நாள். பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், பேயாழ்வார், பூதத்தாழ்வார் வீதி புறப்பாடு. திருமஞ்ஜனம், ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. மாலை திருப்பாவை சாற்றுமுறை. பொழுதுடன் திருவாராதனம். மாலை விஜயதசமி புறப்பாடு அம்பு போடுதல் | ஸ்ரீ பூதத்தாழ்வார் ஸ்ரீ S.T. நரஸிம் ஹாசார்யர் குடும்பத்தினர். விஜயதசமி: ஸ்ரீ A.R. ஸந்தானக்ருஷ்ணன் – ஸ்ரீ A.K. முத்துஸ்வாமி |
| 25/10/2023 | 8 | ஏகாதசி / த்வாதசி | புதன் | சதயம் | பேயாழ்வார் உத்ஸவம் 10ம் நாள். பேயாழ்வார் மங்களாசாஸனம். காலை பேயாழ்வார் திருவீதி புறப்பாடு. பெருமாள், தாயார், பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு பத்தி உலாத்தல், ஊஞ்ஜல். பெருமாள், ஆழ்வார் வீதி புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. | பேயாழ்வார் உத்ஸவம் 10 நாட்களும் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 26/10/2023 | 9 | த்வாதசி / த்ரயோதசி | வியாழன் | பூரட்டாதி | பேயாழ்வார் காலை கந்தபொடி உத்ஸவம் வீதி புறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பாதம் கைங்கர்யம் அசோசியேஷன் |
| 27/10/2023 | 10 | சதுர்தசி | வெள்ளி (2) | உத்தரட்டாதி | காலை பெருமாள் தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம் . மாலை தாயார் உள் புறப்பாடு | தாயார் உத்ஸவம்: அழிசூர் ஸ்ரீ A.V. ராமன் – ஸ்ரீ A.V. முகுந்தன் |
| 28/10/2023 | 11 | பௌர்ணமி | சனி | ரேவதி | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை 5.30 வீதிபுறப்பாடு. சந்த்ர க்ரஹணம் 3 மணிக்குள் திருவாராதனம் | ஸ்ரீ பாலாஜி ராஜகோபாலன் |
| 29/10/2023 | 12 | ப்ரதமை | ஞாயிறு | அச்வினி | திருமால்வடை | |
| 30/10/2023 | 13 | த்விதீயை | திங்கள் | பரணி | திருமால்வடை | |
| 31/10/2023 | 14 | த்ருதீயை | செவ்வாய் | க்ருத்திகை | திருமங்கை ஆழ்வார் | |
| 01/11/2023 | 15 | சதுர்த்தி | புதன் | ரோஹிணி | கண்ணன் ஆஸ்தானம் | |
| 02/11/2023 | 16 | பஞ்சமி | வியாழன் | ம்ருகசீர்ஷம் | திருக்கச்சி நம்பிகள் | |
| 03/11/2023 | 17 | ஷஷ்டி | வெள்ளி (3) | திருவாதிரை | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம் மாலை தாயார் உள் புறப்பாடு | தாயார் உத்ஸவம்: மாங்குடி ஸ்ரீ ரங்கராஜன் |
| 04/11/2023 | 18 | ஸப்தமி | சனி | புனர்வஸு | காலை ராமர் திருமஞ்ஜனம் மாலை ஆஸ்தானம் | |
| 05/11/2023 | 19 | அஷ்டமி | ஞாயிறு | புஷ்யம் | திருமால்வடை | |
| 06/11/2023 | 20 | நவமி | திங்கள் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 07/11/2023 | 21 | நவமி / தசமி | செவ்வாய் | மகம் | திருமழிசைப்பிரான் | |
| 08/11/2023 | 22 | தசமி / ஏகாதசி | புதன் | பூரம் | ஸ்ரீ ஆண்டாள் | |
| 09/11/2023 | 23 | ஏகாதசி / த்வாதசி | வியாழன் | உத்தரம் | காலை பெருமாள் தாயார் திருமஞ் ஜனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு. தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீ D. ஸ்ரீதரன் |
| 10/11/2023 | 24 | த்வாதசி | வெள்ளி (4) | ஹஸ்தம் | பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 1ம் நாள். காலை தாயார் திருமஞ்ஜனம். இரவு தாயார் பத்ம வாஹனம். ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ D.S. ராஜகோபாலன் |
| 11/11/2023 | 25 | த்ரயோதசி | சனி | சித்திரை | பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 2ம் நாள். காலை தாயார் திருமஞ் ஜனம் மாலை தாயார் ஸூர்ய ப்ரபை உள் புறப்பாடு ஆஸ்தானம் ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N.S. வரதாச்சாரி குடும்பத்தினர். எண்ணைக்குடம் வீதி புறப்பாடு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12/11/2023 | 26 | சதுர்தசி | ஞாயிறு | ஸ்வாதி | தீபாவளி பண்டிகை. காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு. பொழுதுடன் திருவாராதனம். பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 3ம் நாள். காலை தாயார் திருமஞ் ஜனம். மாலை தாயார் சின்ன கருட வாஹனம் உள் புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | தீபாவளி: ஸ்ரீ R. வாஸுதேவன். பஞ்சமி தீர்த்த உத்ஸவம்: ஸ்ரீமதி பங்கஜம் ரங்கராகவன் |
| 13/11/2023 | 27 | அமாவாசை | திங்கள் | விசாகம் | பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 4ம் நாள். காலை தாயார் திருமஞ் ஜனம். மாலை தாயார் சந்த்ர ப்ரபை உள் புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ V.C. ஸ்ரீபதி |
| 14/11/2023 | 28 | ப்ரதமை | செவ்வாய் | அனுஷம் | அன்னக்கூட உத்ஸவம். காலை பெருமாள் திருமஞ்ஜனம் ஆஸ்தானம். பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 5ம் நாள். காலை தாயார் திருமஞ்ஜனம் மாலை கிளி வாஹனம் உள் புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | அன்னக்கூட உத்ஸவம்: ஸ்ரீ S. கோபால கிருஷ்ணன். பஞ்சமி தீர்த்த உத்ஸவம்: ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் |
| 15/11/2023 | 29 | த்விதீயை | புதன் | கேட்டை | பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 6ம் நாள். காலை தாயார் திருமஞ்ஜனம் மாலை தாயார் யானை வாஹனம் உள் புறப்பாடு. ஆஸ்தானம் ஸேவாகாலம் சாற்றுமுறை. | பஞ்சமி தீர்த்த உத்ஸவம்: ஸ்ரீ பார்த்தஸாரதி நரசிம்மன் |
| 16/11/2023 | 30 | த்ருதீயை | வியாழன் | மூலம் | பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 7ம் நாள். காலை தாயார் திருமஞ் ஜனம். மாலை தாயார் கஜ லக்ஷ்மி வாஹனம் உள் புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | பஞ்சமி தீர்த்த உத்ஸவம்: ஸ்ரீ L.V. நரசிம்மன் குடும்பத்தினர் |

## ஐப்பசியில் முக்கிய உத்ஸவங்கள்

**ஸேனைநாதன் திருநக்ஷத்ரம்**
அக்டோபர் 21 (சனி)

**ஸ்ரீ தேசிகன் 27-ஆம் நாள் விடாயாற்றி**
அக்டோபர் 22 (ஞாயிறு)

**மஹா நவமி, ச்ரவணம், பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்**
அக்டோபர் 23 (திங்கள்)

**விஜய தசமி, பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்**
அக்டோபர் 24 (செவ்வாய்)

**பேயாழ்வார் திருநக்ஷத்ரம்**
அக்டோபர் 25 (புதன்)

**தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம் (9 நாட்கள்)**
நவம்பர் 10 (வெள்ளி) முதல் 18 (சனி) வரை

**டோலோத்ஸவம்**
நவம்பர் 11 (சனி)

ஸ்ரீ:

# நரஸிம்ஹமும் கவிதார்க்கிக ஸிம்ஹமும்

ஸ்ரீ உ.வே. புரிசை நடாதூர் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி

(ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தின் 1975-ம் ஆண்டு ஸம்ப்ரோக்ஷண மலரில் வெளிவந்த வ்யாஸம்)

ஸாது பரித்ராணார்த்தமாக ஏற்பட்ட பகவதவதாரங்களில் ஸ்ரீ ந்ருஸிம்ஹ, ராம, க்ருஷ்ணாவதாரங்கள் ச்ரேஷ்டமானவைகள். மேலையார்களும் இவ்வவதாரங்களின் ஜயந்தி மஹோத்ஸவங்களைக் கொண்டாடி வ்ரதாநுஷ்டானமிருந்து இவ்வவதாரங்களின் மேன்மையை நமக்கு விளக்கினார்கள். நாமும் இவர்களின் அவதார தினங்களைக் கொண்டாடி வருகிறோம்.

இவைகள் தன்னிலும் ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம் மிக்கச் சிறப்புடையது. ஸ்ரீ ராமகிருஷ்ணாவதாரங்கள் மிகவும் ஹேயமான கர்ப்ப வாஸத்தைப் பெற்றிருந்தன. ஸர்வஜ்ஞன் என்று போற்றப்பெற்ற இவர்கள் வசிஷ்டர், விச்வாமித்ரர், ஸாந்தீபிநீ முதலான மகரிஷிகளின் ஆதேசவச்யர்களாய் குருகுலவாஸம் பண்ணி அவர்களுக்குப் பணிவிடைகள் செய்து ஜ்ஞானத்தை ஸம்பாதிக்க வேண்டி இருந்தது. சிற்றன்னையின் ஆஜ்ஞாநுஸாரியாய் ராமபிரான் அரண்யம் சென்றான்! மொய்ம்பால் வளர்த்த யசோதா பிராட்டியின் வச்யனான ராமாநுஜன் (கண்ணன்) கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டப்பட்டு உரலினோடு இணைந்து ஏங்கி நின்றான். ஊராரின் வம்புப் பேச்சிற்கு பயந்து ஸ்ரீராமன் அகலகில்லேன் இறையுமென்னும் ஸீதா பிராட்டியை அக்நிப்ரவேசம் செய்யச்செய்தும், காட்டிலே விடச்செய்தும் தனியாகத் தவித்துப் போனான்! **வேயினன்ன தோள்மடவார் வெண்ணெயுண்டானிவனென்று** ஏசின பேச்சைக் கேட்டு நின்றான் கண்ணன்! அவனே பின்னோர் தூது ஆதிமன்னர்க்காகச் சென்றான். அவன் ஸ்யமந்தக மணியைத் திருடிவிட்டதாக நாடெங்கிலும் சொல்ல அந்த அபவாதத்தைப் போக்கிக் கொள்ள வனாந்தரங்களில் எல்லாம் திரிந்து படாதன பட்டு மணியைக் கொணர்ந்து கொடுத்தான். இதைப் போன்று மற்றும் பல இன்ப துன்பங்கள் இவ்விரண்டு அவதாரங்களிலும் அநுபவிக்க நேர்ந்தன.

ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரத்தில் இவ்விதமான இன்ப துன்பங்களின் கந்தலேசமும் கிடையாது. ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரத்தில் பரத்வம், ஸௌலப்யம் இரண்டும் ப்ரகாசித்தன. மேலும் கண்ணன் கீதையில்:

*பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்|*
*தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே||*

என்றருளிச் செய்தார். அதாவது ''ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும், பயிர்களை பாதிக்கும் களையைக் கிளருமாப்போல் ஸாதுக்களுக்கு உபரோதகர்களாய் உள்ள துஷ்க்ருதுக்களை வதம் செய்வதற்கும் குறைந்தும் அழிந்தும் போன தர்மங்களை நிலை நிறுத்துவதற்காகவும் யுகங்கள்தோறும் பிறக்கிறேன்'' என்று அவதார ரஹஸ்யத்தில் வெளியிட்டருளினார்.

ஆனால் இதன்படி ராமக்ருஷ்ணர்கள் அவதரித்ததாக மஹரிஷிகள் கூறவில்லை. **கௌசல்யா அஜநயத் ராமம், தம் அத்புதம் பாலகம் வஸுதேவ ஐக்ஷத** (கௌசல்யாதேவி





ராமனைப் பெற்றெடுத்தாள், அழகான குழந்தையை வஸுதேவர் பார்த்தார்) என்று மஹரிஷிகள் இவர்களின் அவதாரத்தை ப்ராக்ருத சிசுக்களின் பிறப்பைப் போல் பேசினார்கள்.

ராமக்ருஷ்ணாவதாரங்களில் ஸாது பரித்ராணமும் துஷ்க்ருத் விநாசமும் சரியாக நடைபெறவில்லை. **ஏஹி பச்ய சரீராணி** என்று மஹரிஷிகள் கண், காது, மூக்கு, கை, கால்கள் இவைகளை இழந்து இருக்கும் தங்கள் சரீரங்களைக் காட்டி தங்களை ரக்ஷித்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்ட பிறகு, அவதாரமெடுத்துப் பல வருஷங்கள் கழித்து (காலங் கடந்து) ரக்ஷிக்க முற்பட்டான். அப்பொழுது மனிதருக்காகக் **கானகமெல்லாம் திரிந்து கரியதிருமேனி வாட படாதன பட்டு, நடந்த கால்கள் நொந்தவோ** என்று பின்புள்ளார் புலம்பும்படிச் சென்று துஷ்க்ருத்துக்களைக் கொன்றார்கள்.

*ஸ்ரீ ந்ருசிம்ஹவதாரம்*
*ஸத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்*
*வ்யாப்திம்ச பூதேஷு அகிலேஷு ச ஆத்மநஹ|*
*அத்ருச்யத அத்யத்புதரூபம் உத்வஹந்*
*ஸ்தம்பே ஸபாயாம் நம்ருகம் ந மாநுஷம்||*
(ஸ்ரீமத் பாகவதம் 7-8-18)

தம்முடைய ப்ருத்யனான ப்ரஹ்மாவினால் தேவர், மனிதர், விலங்கு, தாவரம் என்ற நால்வகைகளில் ஒன்றினாலும் சாகாதபடியும், ப்ரஹ்ம ஸ்ருஷ்டிக்கு உட்பட்டவைகளால் சாகாதபடிக்கும், அஸ்த்ர சஸ்த்ரங்களினாலோ, ஈரமுள்ளவைகளாலோ, உலர்ந்தவைகளாலோ, பகலிலோ, இரவிலோ, சாகாதபடிக்கும் ஹிரண்யனுக்கு கொடுக்கப்பட்ட வரம் பொய்யாகாமல் இருக்கும்படி அவதரித்தான்.

மெய்யடியாரான ப்ரஹ்லாதாழ்வான், **எங்கும் உளன்** என்றுசொன்னவார்த்தையை உண்மையாக்குவதற்காக அனைத்துலகிலும் வ்யாப்தியை உடையவனாயும், **குத: ஸ்தம்பே ந** என்று இரணியன் கேட்க **த்ருச்யதே** என்று ப்ரஹ்லாதன் பதில் அளித்த வார்த்தையை மெய்ப்பிப்பதற்காக ஹிரண்யனின் அளந்திட்ட தூணை அவன் தட்ட அப்பொழுதே அத்யத்புத ரூபத்துடன் அவதரித்தான்.

கண்ணன் கீதையில் **கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மேபக்த: ப்ரணச்யதி! தேஷாம் அஹம் ஸமுத்தர்த்தா** — என்னுடைய பக்தர்கள் நாசமடைய மாட்டார்கள். அவர்களைக் காப்பாற்றித் தருபவன் நான் — என்று சொல்கிறார். அதன்படி நிஜபாஷிதம் ஸத்யமாக்குவதற்காக அவதரித்தார்.

ஸாது பரித்ராணத்திற்கும், துஷ்க்ருத் விநாசநத்திற்கும் ஸம்பவாமி (நானே அவதரிக்கிறேன்) என்று தாம் சொன்ன வார்த்தையை உண்மையாக்க, சொன்ன வண்ணம் செய்த பெருமான் இவனேயாகும். ஸாதுக்கள் கஷ்டப்பட்டு, கதறி அழுத பிறகு காலம் கடந்து ஆர்த்த ரக்ஷணம் செய்தானில்லை. பயிருக்கு வாட்டம் உண்டாவதற்கு முன்பே களையை எடுப்பாரைப் போல் அவதரித்த உடனேயே துஷ்க்ருத் விநாசத்தைச் செய்து அவனடிக்கீழ் அமர்ந்து புகுந்த மெய்யடியனான தானவ சிசுவான, ஸாது ச்ரேஷ்டனான ப்ரஹ்லாதாழ்வானை ரக்ஷித்தருளினான்:

இவ்விதம் அவதரித்த சீரிய சிங்கத்தின் அவதாரத்தில் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அத்யந்த பக்தியுள்ளவர்களாக இருந்தார்கள்.

*ஸ்ரீந்ருஸிம்ஹனைப் பற்றி நம்மாழ்வாரின் அநுபவம்*
*எங்கும் உளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து*
*இங்கில்லையால் என்றிரணியன் தூண்புடைப்ப*
*அங்கப்பொழுதே அவன் வீயத் தோன்றிய, என்*
*சிங்கப் பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே.*
(திருவாய்மொழி 2-8-9)

எம்பெருமான் எங்கும் இருக்கிறான் என்று சொன்ன தன் மகனை இரணியன் கோபித்து இவ்விடத்தில் இல்லையே என்று தானே அளந்து பொருந்தப் பார்த்து நாட்டிய அவன் முன்புள்ள தூணைத் தன் கையால் தட்டியதும் அந்தத் தூணிலேயே அப்பொழுதே அவன் முடியும்படித் தோன்றிய என் சிங்கப்பிரான் பெருமை ஆராய்வதற்குரியதோ! என்று பாசுரத்தின் பொருள்.

இப்பாசுரத்தில் தம்முடைய அபிமானம் தோன்ற **என் சிங்கப்பிரான்** என்றும் **அவனது பெருமை ஆராயும் சீரமைத்ததோ** என்பதால் வாய்கொண்டு வர்ணிக்க முடியாதபடி வாசாமகோசரமான கல்யாண குணங்களையுடையவன் என்றும் அருளிச் செய்தார்.

**ஸத்வா ஸக்திமதி: கிருஷ்ணே** என்று ப்ரஹ்லாதாழ்வான் எப்பொழுதும் கண்ணனையே த்யானம் பண்ணிக்கொண்டிருப்பதாக பராசர ப்ரஹ்மரிஷி அருளிச் செய்திருப்பதை கணிசித்து **எங்கும் உளன் கண்ணன்** என்றே தகப்பனுக்கு ப்ரஹ்லாதன் பதிலளித்ததாக ஆழ்வார் அருளிச் செய்துள்ளார்.

**ஸ்ரீஸ்வாமி தேசிகனின் அநுபவம்**

வகுளாபரணப் பெருமாளின் தமிழின் வாசி அறிந்த நம் கவிதார்க்கிகஸிம்ஹம் ஆழ்வாரின் பாசுரத்தை அடியொற்றி ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயத்தில் ஒரு ச்லோகம் அருளிச் செய்துள்ளார். அதாவது,

*கிமத்ர ஹ்ரிரித்யத ப்ரகடிதோபஹாச க்ரமம்*
*ஹிரண்யகர கட்டித: ஸபதி ஜ்ரும்பித: ஸ்தம்பத: |*
*புரஸ்புரதி ஸம்ப்ரம ஸ்புடஸடாச்சடாசோடங்*
*த்ருடதூந கநாரவ த்விகுண ப்ரும்ஹிதஸ் ஸிம்ஸஹராட் ||*

''இவ்விடத்தில் ஹரி இருக்கிறானோ? என்று பரிஹாஸ சிரிப்புடன் (எதிரில் தூணை ஹிரண்யன்

கையினால் குத்த, அந்தத் தூணிலிருந்து அப்பொழுதே ஸடாபடலபீஷணராய், மேக கம்பீர கோஷத்தையுடையவராய், அட்டஹாஸ சிரிப்புடன் அவதரித்த நரஸிம்ஹன் (என்) எதிரில் ப்ரகாசிக்கிறார்'' என்று ச்லோகத்தின் பொருள்.

இனி ஆழ்வார் அருளிச்செயலையும் ஸ்வாமியின் ஸ்ரீஸூக்தியையும் சேர்த்துப் பார்ப்போம்.

இங்கிலையால் - கிமத்ரஹரிரிதி. இரணியன் தூண் புடைப்ப – ஹிரண்யகர கட்டித ஸ்தம்பா.த் அங்கப்பொழுதே அவன் வீயத் தோன்றிய - ஸபதி ஜ்ரும்பித: ஸ்தம்பத:... என்று பூர்வார்த்தத்தால் ஆழ்வார் பாசுரத்தை அருளிச் செய்துள்ளார். மேலும் 'புரஸ்புரதி' அன்று செய்த ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம் இப்பொழுது என் எதிரில் ப்ரகாசிக்கிறது என்றார். இந்த வாக்யத்தை உத்தரார்த்தத்தின் ஆரம்பத்தில் போட்டிருப்பதால், பூர்வார்த்தம் பூராவும் ஆழ்வாரின் அருளிச் செயலின் அநுகரமாக இருப்பதால் ஆழ்வாரின் அருளிச்செயல் பூர்வார்த்தத்தில் ப்ரகாசிக்கிறது என்று அருளிச்செய்ததாகவும் கொள்ளலாம்.

ஸ்ரீந்ருஸிம்ஹ தாபநீயோபநிஷத் நமக்குப் பரம உத்தேச்யமானதாகும். அதில் சொல்லப்பட்ட ஸ்ரீந்ருஸிம்ஹாநுஷ்டாந மந்த்ரத்தை பெரியோர்கள் உபதேசம் பெற்று நித்யம் ஜபித்து வருகிறார்கள். அந்த மந்த்ரத்தை மந்த்ரராஜன் என்பார்கள். ஒன்பது பதங்களுடைய அம்மந்திரத்தின் மஹிமையை ஒன்பது ச்லோகங்களால் சங்கரன் விவரித்துள்ளார். இந்த ஸ்தோத்ரத்திற்கு **மந்த்ரராஜபத ஸ்தோத்ரம்** என்று பெயர். இதில்,

*தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:|*
*அதோஹமபி தே தாஸ: இதி மத்வா நமாம்யஹம்||*

''எல்லோரும் பரமாத்மாவிற்கு அடிமைகள். ஆகையால் அவர்களில் ஒருவனான நானும் ஸ்ரீந்ருஸிம்ஹதாஸன் என்று எண்ணி அவனை வணங்குகிறேன்'' என்று ஒரு ச்லோகம் இருக்கிறது. ஸ்வாமி தேசிகன் இந்த ச்லோகத்தை ப்ரமாணமாக எடுத்து ''என்று ஸர்வஜ்ஞனான ருத்ரன் தானே சொன்னான்'' என்று அருளிச் செய்துள்ளார்.

ஸ்ரீஸ்வாமி ஸ்ரீந்ருஸிம்ஹன் விஷயமாக காமாஸிகாஷ்டகத்தை அருளிச் செய்துள்ளார். அதில் இரண்டாவது ச்லோகத்தில் **தாபநீய ரஹஸ்யாநாம் ஸார: காமாஸிகாஹரி:** – ஸ்ரீந்ருஸிம்ஹ தாபநீயோபநிஷத் வாக்யங்களில் ப்ரதானமாக ப்ரதிபாதிக்கப்பட்ட காமஸிகா ஹரியானவன் நமது தாபங்களைப் போக்கட்டும் என்று ப்ரார்த்திக்கிறார். கடைசியில்,

*த்வயி ரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை:*
*த்வயி சாரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை:|*
*இதி நிச்சிததீ: ச்ரயாமி நித்யம்*
*ந்ருஹரே! வேகவதீ தடாச்ரயம் த்வாம்||*

''ஹே ந்ருஸிம்ஹா! தேவரீர் ரக்ஷிக்கத் திருவுள்ளம் கொண்டால் மற்ற ரக்ஷகர்களால் என்ன ப்ரயோஜனம்! உம்மை ஆச்ரயித்த நான் மற்றவர்களை ஆச்ரயிக்க மாட்டேன். தேவரீர் ரக்ஷிக்காமல் கைவாங்கினாலும் மற்றவர்களை ஆச்ரயிக்க மாட்டேன். உம்மால் நிக்ரஹிக்கப்பட்டவர்களை அவர்களால் காப்பாற்ற முடியாது என்பதை அறிவேன். அவ்விதம் நிச்சய ஜ்ஞானமுள்ளவனாய் தேவரீரை ஆச்ரயிக்கிறேன்'' என்று அருளிச் செய்துள்ளார்.

[இந்த வ்யாஸத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹனுக்கு மேன்மையைக் கூறுவதற்காக ராம க்ருஷ்ணாவதாரங்களில் கூறப்பட்ட குறையானது 'ந ஹி நிந்தா' ந்யாயத்தைச் சேர்ந்தது என்று சாஸ்த்ரஜ்ஞர்கள் கூறுவார்கள். எல்லோரும் அவ்விதமே திருவுள்ளம் பற்ற வேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.]

## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் '**ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்**' இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும்**
**விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு, மயிலாப்பூர்,
சென்னை – 600004. போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.










ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்










**ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்**









## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்









ஸ்ரீ:





ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்















## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்














## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்

















## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்








ஸ்ரீ:




## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்











## ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்













## பவித்ரோத்ஸவம்













பவித்ரோத்ஸவம்

















பவித்ரோத்ஸவம்













அம்ருதோத்ஸவம்







அம்ருதோத்ஸவம்









அம்ருதோத்ஸவம்














ஸ்ரீ:





அம்ருதோத்ஸவம்







ஸ்ரீ:

# பிள்ளைத்தமிழுக்கு வித்திட்ட பெரியாழ்வார் (15)

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

சென்ற திருமொழிகளில் பெரியாழ்வார் கண்ணனைப் பூச்சூட்டலுக்கு யசோதை அழைத்தவாற்றை விளக்கமாக அனுபவித்தோம்! இவ்விதழில் யசோதை கண்ணனுக்குக் காப்பிடுவதை அவரது பாசுரங்களைக் கொண்டு ரஸிக்கலாம்.

நீராட்டிக் குழல்வாரிப் பூச்சூட்டின பிறகு கண்ணன் தெருவிலே விளையாடிக்கொண்டிருக்க அந்திபொழுது வந்தது. அழகன் கண்ணனுக்கு த்ருஷ்டி தோஷபரிஹாரமாகக் காப்பிட நினைத்த யசோதை அவனை அழைத்தாள். அவளது அனுபவத்தைப் பெரியாழ்வார் தம் பாசுரங்களால் அனுபவிக்கிறார். அர்ச்சாவதார எம்பெருமானுக்கு வீதி புறப்பாடு கண்டருளி திரும்பியவுடன் திருவந்திக்காப்பு இடுவது வழக்கம். இங்கு அந்தி என்றால் முடிவு. இது உத்ஸவத்தின் இறுதியில் இடும் காப்பு என்றாகும். இந்த காப்பிடல் முழுவதும் பெரியாழ்வார் திருவெள்ளறை எம்பெருமானைக் குறித்துப் பாடுகிறார்.

முதல்பாசுரத்தில் காப்பிட அழைக்கும் அழகைப் பாருங்கள்! சதுரர்களான வித்வான்களை, (பரமைகாந்திகளை) உடைய வெள்ளறையில் அவதரித்து நின்றுள்ளவனே! என்று எம்பெருமானை விளிக்கிறார். அந்தத் திருவெள்ளறையின் அழகை விரிக்கிறார். அங்கு மாளிகைகள் எல்லாம் வானளாவி நிற்பதால் வீடுகளின் மேல் நிலைகளில் சந்திரன் வந்து சேரும்படி உயர்ந்திருக்கிறதாம்! அழகனே! என்று எம்பெருமானை அழைக்கிறார். எம்பெருமானை அழகனே! என்று விளிப்பதால் அவன் த்ருஷ்டிப் படும்படியானவன் என்பதையும் காட்டுகிறார். காப்பிட விரைந்து அழைப்பதின் காரணத்தையும் விரிக்கிறார். இந்திரனும், பிரமனும், ருத்திரனும் மற்றை இமையவர்கள் எல்லாரும் வேதமந்திரங்களை ஓதி மந்த்ர புஷ்பங்களை (கற்பக மலர்களை)க் கையில் கொண்டு வந்து, மனிதர்களின் கண்ணில் தெரியாமல் காத்துக் கிடக்கிறார்கள். வெள்ளறையில் நிற்பவனே! திருவந்திக் காப்புக் கொள்ள வருவாயாக! என்று அழைக்கிறார்.

இரண்டாம் பாசுரத்தில் நேசத்தோடு நான் நின்று உன்னைக் காப்பிட அழைக்கின்றேன்; நீயோ நேசமில்லாமல் அங்கு நின்றபடியே இருப்பதும் தகுமோ என்று யசோதை அழைக்கிறாள். மதிள் என்னும் மேலான செல்வத்தையுடைய திருவெள்ளறையில் நின்றுள்ளவனே! நீ மேய்த்துக் கொண்டு வந்த கன்றுகளோடு பசுக்களும் வந்து அடைந்துவிட்டன. அப்பசுக்கள் கன்றினை ஊட்டவைத்துப் பாலைக் கறத்தெடுக்கக் கத்துகின்றன. அவற்றைச் செய்யவேண்டிய நான் நாற்சந்தியில் இருக்கும் உன்னைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்கு நேரம் ஆகிக்கொண்டிருக்கிறது, என்மேல் நேசமில்லாமல் நீ அங்கேயே நிற்கின்றாய். அந்திப் பொழுதில் வெளியில் நிற்காதே! என் ஹிதமான வார்த்தைகளைக் கேட்டு, நான் உன்னைக் காப்பிட, உடனே வாராய் என்று யசோதையாகப் பாசுரமிடுகிறார் பெரியாழ்வார்.

மூன்றாம் பாசுரத்தில் கண்ணன் செய்த குறும்பைக் கண்டு யசோதை அதட்ட, அதனால் வீட்டிற்குள்ளும் வராமல் உணவும் உண்ணாமல் இருக்கும் கண்ணனை அழைக்கிறாள். காலை உச்சி மாலை என்ற மூன்று வேளைகளிலும் தேவதைகள் ஸ்தோத்ரம் செய்யும், பரமைகாந்திகளான யோகிகள் வசிக்கும் திருவெள்ளறை நின்ற பிரானே! மெல்லிய செம்பொத்த தனங்களையுடைய பெண்களுடைய விளையாட்டில் செய்த மண்வீட்டையும் சோற்றையும் அழித்தெறிந்து அவர்கள் கூச்சலிடும் பொழுது வந்து நானுன்னை அதட்ட, கோபித்துக்கொண்டு வீட்டிற்கு வராமல் இருக்கிறாய்! அன்னமும் உண்ணாமல் இருக்கிறாய்! என்னை ஆள்பவனே! இப்போது, களைத்துக் கஷ்டப்படும் உனக்கு ஒன்று சொல்லுவேன்! நான் உனக்கு இஷ்டமில்லாத ஒன்றையும் செய்யமாட்டேன். எனக்கு உபகாரகனே! காப்பிட வாராய் என்று அழைக்கிறாள். முதல் பாசுரத்தில் தேவதைகள் காத்திருப்பதைச் சொன்னவள், இரண்டாம் பாசுரத்தில் பசுக்கள் போன்ற உயிரினங்கள் காத்திருப்பதைச் சொன்னவள், இப்போது அவர்கள் எல்லோருக்கும் இரங்காமல் போனாலும் உன் பசியைப் போக்கிக்கொள்ளவாவது வாராய் என்று கூப்பிடும் பொங்கும் பரிவு உய்த்து நெகிழத்தக்கது. நீ ஏன் உன்னோடு சண்டையிடும் பெண்களிடம் செல்கிறாய்? உன் தாயான நான் உன்னால் ஆளப்படக் காத்திருக்கிறேன் என்று கூறுவதும்,



எம்பெருமான் கூடாரை வெல்வதில் காட்டும் முனைப்பையும் குறிப்பிட்டு அங்கலாய்பது அழகு!

நான்காம் பாசுரத்தில் வண்ணமே வேலையதொப்பாய்! வள்ளலே காப்பிடவாரய்! என்று யசோதை அழைக்கிறாள். எம்பெருமான் கடல் நிறத்தன் மட்டுமல்ல; கடல் போன்ற ஸ்வபாவமும் கொண்டவன். கடல் பல ரத்தினங்களைக் கொண்டிருப்பது போல தன்னிடம் பற்பல கல்யாணகுணங்களைக் கொண்டிருப்பவன். ஆழ்பவருக்கன்றோ அவை கிடைக்கும்! வேலை நீரே மேகமாகி மழையாகிறது. மழை இன்னார் இனியார் பாராது வர்ஷிக்கிறது. அதுபோன்றே என் கண்ணனின் அருளும் எல்லாரிடமும் ஒக்கச் செல்கின்றது என்ற பொருளில் கடலைச் சொன்னவள், அடுத்து வள்ளல் என்று கண்ணனை விளித்தாள். வெள்ளறையில் நின்றவனே! கணக்கில்லாத பிள்ளைகள் வந்து நீ மணலைக் கொண்டு வந்து அவர்களின் கண்களில் இட்டுக் காலினாலும் உதைத் தாய் என்று என்னிடமே வந்து உன் தீம்புகளைச் சொல்லி முறையிடுகின்றார்கள். நீ ஏன் கண்ட பிள்ளைகளோடும் பழக வேண்டும். அதை விடு! இப்போது காப்பிடவாராய் என்று அழைக்கிறாள். கண்ணனே என்று விளித்ததனால் அவர்கள் உன் கண்ணுக்கு ஏதேனும் தீமை செய்தார்களா? அதனால் அவர் கண்களில் மண்ணைத் தூவினாயா? என்ற பதைபதைப்பும் தொக்கி நிற்கப் பாசுரம் அமைத்திருப்பது அழகு!

ஐந்தாம் பாசுரத்தில் ஞானச்சுடரே என்று எம்பெருமானை விளிக்கிறார்! ஸ்வயம் ப்ரகாசத்தொடு அகிலஹேய ப்ரத்யநீகன் என்பதைக் காண்பித்தார். தேஜஸ்ஸை ஸூர்யாதி தேஜஸ்ஸுக்கள் என்றும் சொல்லலாம். அப்ராக்ருத தேஜஸாகையாலே ஜ்ஞாநாநந்த ஸ்வரூபன் என்ற மேன்மையைக் காட்டினார் என்றும் கொள்ளலாம். திருவெள்ளறையில் அவதரித்தவனே! தீம்பு செய்யும் பிள்ளைகள் இந்த ஆயர்பாடியில் பல்லாயிரக்கணக்காக உள்ளனர். ஆயினும் யார் செய்த தீம்பும் உன் தலையில் அல்லாது மற்றைப் பிள்ளைகளின் மேல் செல்லாதன்றோ! எனக்கு உபகாரகனே! உனது திருமேனிக்கு சொல் நிறையும் அளவுக்குத் தங்களால் முடிந்தவளவு பல்லாண்டு பாடி, த்ருஷ்டிதோஷம் அறும் என்று அச்சமற்று நிற்கும், உன்மேலே குற்றம் ஒன்றும் சொல்லாமல் குணமே கொள்ளும், நல்லார்கள் நன்றாகத் தோத்திரம் செய்யக் காப்பிட வாராய் என்று பரிவுடன் அழைக்கிறாள். இரண்டாவது பாசுரத்தில் கண்ணன் பெண்களிடத்தில் தீம்பு செய்வதைச் சொன்னாள் யசோதை!. மூன்றாவது பாசுரத்தில் ஆண்பிள்ளைகளிடத்தில் இவன் செய்தானோ அவர்களே செய்து இவன் செய்வதாக முறையிட்டார்களோ என்று ஐயமுற்றாள். இப்பாசுரத்திலே பிறரே தீம்புகள் செய்வது என்றும் கண்ணன் அதற்கான தண்டனையைப் பெறுகிறான் என்றும் தீர்மானித்தாள். இப்படி ஆழ்வார், பாசுரங்களைப் பங்கிடுவதே தனியழகு!

ஆறாம் பாசுரத்தில் கண்ணனுக்கு அஸுரர்களால் தீங்குவரும் என்று அவனை விரைந்து வரச் சொல்கிறாள் யசோதை! திருவெள்ளறை திவ்ய தேசத்தை மஞ்சுதவழ் மணிமாடமதில் திருவெள்ளறை என்று அடைமொழியிட்டு அழைக்கிறார். அருளை வர்ஷிக்கக் கூடியவன் உள்ளே இருப்பதால் மேகங்கள் அங்கு தவழ்கின்றதாம். உள்ளிருக்கும் வஸ்து மிக உயர்ந்ததாகையாலே ரத்ன மயமான மாடத்திலிட்டு உயர்ந்த மதில்களைக் கொண்டங்குக் காவலிட்டிருக்கிறார்களாம். இவ்வளவு காவல் இருந்தும் கம்ஸன் உன் மேல் கோபங்கொண்டு கருத்த மேனியும் சிவந்த மயிர்களையும் உடைய பூதனை என்கின்ற பேய்மகளை உன்னைக் கொல்வதற்காக அனுப்பிவைத்தான் என்ற வார்த்தைகளைக் கேள்விப்படுகிறேன். அழகனே! உன் அழகுக்கு த்ருஷ்டி சுற்றிப் போடவேண்டும்; நாற்சந்தியில் நிற்காதே! உடனே வா! காப்பிட வேண்டும் என்று அழைக்கிறாள்.

ஏழாம் பாசுரத்தில் பலவகையாலும் ஒளிபொருந்திய திருவெள்ளறையில் அவதரித்தவனே! கள்ளத் தனத்தை மனத்திலிட்டு சகடமாக வந்த சகடாஸுரனையும் மருதமரங்களையும் அவற்றின் அமைப்புக் குலையும்படி உந்தன் திருக்காலினால் தட்டிய பிள்ளைகளில் சிறந்தவனே! நீ பூதனை என்கின்ற பேயை (அவள் உன்னைப் பிடிக்கும் முன்) அமுக்கிப் பிடித்து அவளில் முலைகளில் பாலுண்ட பின்னும் உனது உண்மையான ஸ்வரூபத்தையும் வரலாற்றையும் அறிந்தவள் அல்லேன்! ஸர்வஸ்மாத் பரனே! மேன்மேலும் நாழிகை ஆகிக்கொண்டிருக்கிறது. சிறு குழந்தைகள் உண்டு படுத்துறங்கும் காலமிது. நான் இன்னும் காப்பிடவும் இல்லையே! விரைந்து வா என்று யசோதை அழைப்பதாகப் பாசுரமிடுகிறார்.

எட்டாம் பாசுரத்தில் இன்பமதனை உயர்த்தாய்! இமையவர்க்கு என்றும் அரியாய்! கும்பக் களிறட்ட கோவே! கொடுங்கஞ்சன் நெஞ்சினிற் கூற்றே! செம்பொன் மதிள் வெள்ளறையாய்! செல்வத்தினால் வளர்பிள்ளாய்! என்று ஆறு விளிகளால் கண்ணனைக் கூப்பிட்டு, பின் கம்பக் கபாலி காணங்குக் கடிதோடிக் காப்பிடவாராய் என்று யசோதை அழைக்கிறாள். **இன்பமதனை உயர்த்தாய்** என்றபொழுது இராமனாகத் தோன்றி புற்பாமுதலாப் புல்லெறும்பாதிகளான அனைத்துக்கும் பேரின்பம் அளித்தவனான நீ இங்கு அவதரித்து யசோதையான என் மனோரதப்படி நடந்துவந்து எனக்குப் பேரின்பத்தைக் கொடுத்து வந்தவனே என்ற பொருளை தொனிக்கவைக்கிறாள்.

கண்ணிமை கொட்டினால் உன்னைக் காணும் இன்பம் குறைந்துவிடும் என்று இமையும் கொட்டாது உன்னை அனுபவிப்பர் தேவர்கள். தேவேந்திரனோ ஆயிரம் கண்ணுடையவன். இருந்தாலும் அவன் உன்னை அனுபவிப்பதை விட்டு அல்ப ஸுகத்திற்கு ஆசைப்பட்டான். ஆதலால் நீ அவர்களுக்கு வெகுதூரத்தில் இருக்கிறாய். அங்கில்லாமல் இங்குத் திருவெள்ளறையில் நிற்கின்றாய்! ஆதலால் இமையவர்க்கு என்றும் அரியாய் என்றாள். உயர்ந்த கும்பத்தையுடைய குவலயாபீடம் என்ற யானையைக் கொன்றவனே! கம்ஸனது மனத்தில் யமனாகவே என்றும் நின்றிருப்பவனே! எந்தக் குறையும் இல்லாமல் செல்வனாக வளரும் நீ அசுரர்களில் கூற்றாக இருந்தாலும் இங்கு கபாலி பிச்சையெடுத்துத் திரிகிறான். அவனை ம்ருத்யுஞ்ஜயன் என்கிறார்கள். ஆதலால் எனக்கு நடுக்கம் ஏற்படுகிறது. கடிது ஓடி வா! ஓடிவந்து காப்பிட்டுக் கொள்வாய்! என்கிறாள்.

ஒன்பதாம் பாட்டில் கண்ணன், நீ அழைப்பதற்காவும், இந்த்ராதி தேவர்கள் வந்திருப்பதற்காகவும் நான் வருவேனா? இந்த வெள்ளறை, சதுரர்கள் வெள்ளறை, நல்லார்கள் வெள்ளறை, வானவர்கள் ஏத்தும் முனிவர்கள் வெள்ளறை என்று புகழ்பெற்ற இடம் இது தெரியாதா? அப்படிப்பட்ட பரமைகாந்திகள் யாராவது காப்பிட வந்துள்ளார்களா? இல்லாவிட்டால் அவர்களை அழைத்துவா! அதுவரையில் விளையாடிக் கொண்டிருக்கிறேன். கம்ஸனைச் சேர்ந்தவராயினும் கபாலியாயினும் எனக்கு ஒருவித பயமும் இல்லை என்று செருக்குடன் வார்த்தை சொல்வதாக வைத்து, யசோதையின் மறுமாற்றத்தை அருளுகிறார். பரமைகாந்த்யம் என்கிற எழில் ப்ரகாசிக்கும் மறையோர், வேதத்தில் உயர்ந்த ருக்குக்களுடன் சங்கினிலே தீர்த்தத்தையும் எடுத்துக்கொண்டு வந்து உனக்கு அந்திக்காப்பு செய்யக் காத்திருக்கிறார்கள். நற்குணங்கள் நிறைந்தவனே! நாற்சந்தி முதலான இடங்களில் நின்று கொண்டு எனக்குத் தீம்பேதும் வராது என்று செருக்குடன் சொல்லாதே! சிறுபிள்ளைகள் தாயார் சொல்வதைக் கேட்கவேண்டும்! தேஜஸ்ஸை உடைய திருவெள்ளறையில் நிற்பவனே! உன்னைத் திருவந்திக்காப்பு இடுவதற்கு உன் உருவத்தை நன்கு விளக்கும் படியாய் ப்ரகாசமாய் விளக்கை ஏற்றப் போகிறேன். விரைந்து வாராய்! என்கிறாள். தான் இடும் காப்பை உருகாட்டும் அந்தி விளக்கு என்கிறாள் யசோதை. அந்தி விளக்கின் உரு பெரியதாய் இருப்பதால் இவ்வாறு சொன்னாள்; அல்லது, அந்தி விளக்கின் ஒளி பட்டு தோஷங்கள் விலக உருவின் மேனி நன்றாக அமையும்; அல்லது இந்தக் காரணத்தைக் கொண்டுக் கண்ணனின் திருமேனியைத் தானும் மற்றவர்களும் நிதானமாக ஒவ்வொரு இடமாக நன்றாக ஸேவிக்கலாம்; அல்லது விளையாடும் பொழுது அங்கங்களில் ஏதேனும் அடிபட்டிருக்கிறதோ என்று சோதித்து மருந்திடலாம் என்று இவ்வாறு பலபடியாய் மனத்தில் கொண்டு யசோதை அழைக்கிறாள் என்று நம் பூர்வாசார்யர்கள் அனுபவிப்பர்! அதோடுமட்டுமல்ல இன்று திருவோண நாள்! நீ நீராடிக் குழல்வாரி, ஆபரணமெல்லாம் அணிந்து பூச்சூடி சென்றதாலும் உனக்கு உடனே இந்த அந்திப்பொழுதில் காப்பிட்டு விளக்கேற்ற வேண்டும்! விமர்சையாகச் செய்யவிருக்கும் இந்த ஏற்பாட்டைக் காண வாராய்! என்ற குறிப்பும் அடங்க அழைக்கிறாள்.

பத்தாம் பாசுரத்தில் இத்திருமொழிக்குப் பலன் சொல்லித் தலைக்கட்டுகிறார். இதில் யசோதையை மாதர்க்குயர்ந்த யசோதை என்கிறார். உலகத்திலுள்ள மாதர்களைக் காட்டிலும், எம்பெருமான் அவதாரம் எடுக்கும் பொழுதெல்லாம் அவனுக்கு யார் யாரெல்லாம் தாயாராக நின்றார்களோ அவர்களைக் காட்டிலும் உயர்ந்தவளான யசோதை என்கிறார். அடுத்து திருவெள்ளறை எம்பெருமானைச் சொல்லும் பொழுது போதமர் செல்வக் கொழுந்து புணர் திருவெள்ளறையான் என்கிறார். இத்தலத்தில் தாயார் திருநாமம் பங்கயச் செல்வி! தாயார் போதில் அமர்வதை விட்டு இத்திருத்தலத்தில் அமர்ந்ததால் இது திருவெள்ளறையாயிற்று! ஆழ்வார் தாயாரின் திருப்பெயரோடும் திருவெள்ளறைப் பெருமானைக் குறித்தது ஒர் அழகு! இப்படித் திருவெள்ளறையில் நின்ற எம்பெருமானான தனது மகனைத் திருக்காப்பிட அழைத்த சொற்களான, வேதத்தின் பயனைத் தரவல்ல ஸ்ரீவிஷ்ணுசித்தர் (பெரியாழ்வார்) சொன்ன இத் திருமொழியின் பாசுரங்களின் ஒவ்வொரு பாதமும் அமைந்ததற்குள்ள பலனை உள்வாங்கி அனுபவிக்கக்கூடிய பக்தர்களது பாபமானது, அந்தி விளக்கேற்ற இருள் தானே விலகுமாப் போல, தானே விலகும் என்று சொல்லி இக்காப்பிடல் என்னும் திருமொழிக்குப் பலனிடுகிறார். இதில் வேதப்பயன் கொள்ளவல்ல விட்டுசித்தன் சொன்னமாலை என்றதால் வேதமோதுவதன் பலனைத் தரும் இத் திருமொழியென்றும் கொள்ளலாம். ஆக இத் திருமொழி காப்பிடுதல் என்ற ப்ரயோஜனத்தை தரும் என்றும், திருப்பல்லாண்டின் முதற்பாட்டில் சொன்ன பலன் கிட்டும் என்றும், ஒவ்வொரு பாசுரத்தின் ஒவ்வொரு அடிக்குமே பலன் கிடைக்கும் என்றும் நம் பூர்வர்கள் பலவிதமாக இத்திருமொழிக்குப் பலன் ஸாதித்துள்ளார்கள்!

திருவெள்ளறைப் பெருமானைக் கண்ணனாக யசோதை பாவிப்பதாகப் பெரியாழ்வார் காப்பிட்ட அழகை அனுபவித்தோம், அடுத்துக் கண்ணன் செய்யும் தீம்புகள் பொறுக்க மாட்டாமல் ஆய்ப்பாடிப் பெண்கள் யசோதையிடம் முறையிடுவதை அடுத்த இதழில் ரஸிக்கலாம்.

***(தொடரும்...)***

ஸ்ரீ:

# பெருமாள் மென்பதங்களின் ப்ரபாவங்கள்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

திருமலையப்பனின் வலது திருக்கை அமைப்பானது **மாம் ஏகம். சரணம் வ்ரஜ** என்று அவன் திருவடிகளை நமக்குக் காட்டுகிறது. இதன் மூலமாக தன் திருவடிகளே உபாயம் என்று தானே வெளியிட்டருளி, அவற்றில் சரண் புகுமாறு சேதனர்களை அவன் விதிப்பது போலுள்ளது. திருவரங்கனது வலது திருக்கையின் அமைப்போ ''என்னிடத்தில் ஒருகால் ப்ரபத்தி செய்தாலே போதுமானது. நீ விரும்பிய பலன் அனைத்தையும் அளிப்பதாக நான் விரதம் பூண்டுள்ளேன். அதனால் ''அஞ்சேல்'' என்ற அபயமளிக்கும் முத்திரையைப் பெற்றுள்ளது. இவ்விரு அர்ச்சாமூர்த்திகளின் திருமேனியம்சம் காட்டுவது எம்பெருமானின் பாதாரவிந்தங்களே நமக்குப் பரமப் ப்ராப்யமும் உபாயமும் என்று. **சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுண்டம் கொடுக்கும் பிரான் என்றும் உன் அடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே** என்றும் ஆழ்வார், அவன் திருவடிகளின் மாஹாத்ம்யத்தைக் கூறுவது இங்கே அநுபவிக்கத் தக்கது.

திருவரங்கனை பாதாதிகேசமாய் அநுபவித்துப் பாசுரமிட்ட நம் பாணர் குலத்தலைவன் தாமருளிய ப்ரபந்தத்தின் முதல் பாசுரத்தில் ஸர்வஸ்வாமியான எம்பெருமானை அமலன், ஆதிப்பிரான், விமலன், விண்ணவர்கோன், நிமலன், நின்மலன், நீதிவானவன் என்றெல்லாம் வரித்து வணங்கி இவ்வளவு திருக்கல்யாண குணங்களை உடைய திருவரங்கத்தம்மானின் **திருக்கமல பாதம் வந்து என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே** என்று அவன் திருவடிகளே தன் இந்த்ரியங்கள் சுவைப்பதற்கு தெவிட்டாத ரஸமாகவும் அநுபவிப்பதற்குப் பரமபோக்யமாயும் இருப்பதாகக் கொண்டாடுகிறார்.

ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட நம் ஆசார்ய வள்ளல் பாண்பெருமாளின் அநுபவத்தை அடியொற்றி **ஸ்ரீ பகவத் த்யாந ஸோபாநம்** என்னும் ஸ்தோத்ரத்தை அருளினார். அரங்கன் திருவடிகளில் சாற்றிக்கொள்ளும் பாதுகைகள் விஷயமாக ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரம் என்னும் மஹாகாவ்யத்தை ஓரிரவில் அருளிச்செய்தார். இன்னும் பலவிடங்களில் அவன் திருவடிகளின் மேன்மையை வெளியிட்டருளினார்.

அப்படி அத்திருவடிகளின் பெருமையையும், விபவத்தில் அத்திருவடிகள் செய்த லீலைகளையும் ஸங்க்ரஹமாக, அதே ஸமயம் ரஸோக்தியாகப் பணித்த பாசுரம்:

*உறு சகடம் உடைய ஒரு கால் உற்றுணர்ந்தன*
*உடன் மருதம் ஒடிய ஒரு போதில் தவழ்ந்தன*
*உறி தடவும் அளவில் உரலோடுற்று நின்றன*
*உறு நெறி ஓர் தருமன் விடு தூதுக்குகந்தன*
*மறநெறியர் முறிய பிருதானத்து வந்தன*
*மலர்மகள் கை வருட மலர் போதில் சிவந்தன*
*மறு பிறவி அறுமுனிவர் மாலுக்கிசைந்தன*
*மனு முறையில் வருவதோர் விமானத்துறைந்தன*
*அறம் உடைய விசயன் அமர் தேரில் திகழ்ந்தன*
*அடல் உரக படமடிய ஆடிக் கடிந்தன*
*அறு சமயம் அறிவரிய தானத்தமர்ந்தன*
*அணி குருகை நகர் முனிவர் நாவுக்கமைந்தன*
*வெறியுடைய துளவமலர் வீறுக்கணிந்தன*
*விழு கரியோர் குமரன் என மேவிச் சிறந்தன*
*விறல் அசுரர் படை அடைய வீயத் துரந்தன*
*விடல் அரிய பெரிய பெருமாள் மென் பதங்களே.*

(அதிகார ஸங்க்ரஹம் - 51)

பற்றினால் விடவொண்ணாத, எப்பொழுதும் அநுபவிக்கத் தெவிட்டாத அமுதமாய் இருக்கும் ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகள் எப்படி இருக்கின்றன? தாமரையில் வஸிக்கும் பிராட்டி தன் மென்மையான திருக்கைகளால் தடவ, அது பொறுக்காமல் மலர்ந்து, சிவந்த புஷ்பத்தைக் காட்டிலும் சிவந்து போயின அவன் மெல்லிய திருவடிகள். வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி என்றபடி.

ஆனால் இந்த ம்ருதுவான திருவடிகள் செய்த திவ்ய லீலைகள் தான் எத்துணை!

''முன் கிருஷ்ணாவதாரத்தில் சகடாஸுரன் பிளந்து போகும்படி உதைத்தனவும், இரண்டு மருத மரங்கள் ஒடிந்து போகுமாறு தவழ்ந்தனவும், வெண்ணெயைத் திருடும்பொழுது உரலோடு பொருந்தி கட்டப்பட்டு நின்றனவும், நிகரற்ற தர்மபுத்ரன் வேண்டுகோளுக்கிணங்க துரியோதனனிடத்தில் தூது செல்ல மகிழ்ந்து நடந்தனவும், துஷ்ட நிக்ரஹத்திற்காக ப்ருந்தாவனத்தில் வந்து ஸஞ்சரித்ததனவும், இப்பூவுலகில் மறுபிறவியை அறுக்க விரும்பும் முனிவர்களுக்கு கதியாய் நின்றனவும், மனுவம்சத்தில் வந்த ஒப்பற்ற ஸ்ரீரங்கவிமானத்தில் நித்யவாஸம் செய்தனவும், பார்த்தனின் தேரில் நின்று ப்ரகாசித்தனவும், மிகவும் வலிமை வாய்ந்த காளியனின் தலை

நசுங்கும்படி நடனமாடி அழித்தனவும், பிறமதத்தினருக்கு எட்டாக் கனியாய் இருக்கும் பரமபதத்தில் அமர்ந்தனவும், திருக்குருகூர்தலைவனும் ப்ரபந்ந ஸந்தான கூடஸ்தருமான ஸ்வாமி நம்மாழ்வார் தம் ஸ்ரீஸூக்திகள் மூலமாக சுவைப்பதற்குத் தக்க விஷயமாய்ப் பொருந்திநின்றனவும், வாஸனைமிக்க திருத்துழாயைச் சூடி அழகுபெற உரியனவும், உத்தரையின் கர்பத்திலிருந்த கரிக்கட்டையைப் பரீக்ஷித் என்னும் இளங்குமரனாக்கினவும், மிக்க வீரமுள்ள அஸுரர் படையை முழுவதுமாக ஒழித்தனவும் ஆம்,'' என்று ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளே இத்தனை கார்யங்களையும் செய்தன என்று உத்கோஷிக்கிறார். மேலும் ''இத்தகைய திருவடிகளையே உபாயகமாகவும் பலனாகவும் கொண்டு அவனடியார்கள் உஜ்ஜீவிப்பார்களாக!'' என்று பெரியபெருமாளின் திருவடியை ஆச்ரயிப்பதனால் வரும் பலனையும் நிர்தாரணம் பண்ணுகிறார் நம் கவிஸிம்ஹம்.

காவிரிக்கரையின் மறுபக்கத்தில், திருவரங்கனைப் போலவே சயன திருக்கோலத்தில் வீற்றிருக்கும் அமுதனைப் பார்த்து **நடந்த கால்கள் நொந்தவோ என்ற** திருமழிசைப்பிரானின் ஆற்றாமை இவ்விடத்தில் நன்கு சுவைக்கத்தக்கது.

திருப்பாற்கடலில் எழுந்தருளியிருப்பவனும் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனுமான திருமாலை வேறொரு பலனையும் எதிர்பாராமல் அவன் திருவடித் தாமரைகள் ஒன்றையே சரணமாகப் பற்றுபவர்களே பரம பாகவதர்கள். அப்பரமைகாந்திகள் எப்பேர்பட்டவர்களாக இருந்தாலும், ஏதேனும் ஒரு ப்ரகாரத்தில் அவர்களுக்கு ஒரு இன்னல் நேரிடும் போது பரமன் ஓடோடி வந்து அவர்களை ரக்ஷிக்கிறான்.

*தொட்ட படையெட்டும் தோலாத வென்றியான்*
*அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று - குட்டத்துக்*
*கோள் முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்*
*தாள் முதலே நங்கட்குச் சார்வு.*

(மூன்றாம் திருவந்தாதி - 99)

என்றபடி கஜேந்த்ராழ்வானின் வ்ருத்தாந்தமே இதற்குச் சிறந்த சான்று. பொய்கையுள் மிகவும் பலம் உடையதான முதலை ஒன்று கஜேந்த்ராழ்வானின் கால்களைக் கவ்வ, ''ஆதிமூலமே!'' என்று அலறிய ஆனையின் கூவலுக்கிரங்கினான் பாம்பணைப்பள்ளியான். தம்மிடமுள்ள ஆயுதங்களுள் ஒன்று கெட்டாலும் மற்றொன்று கொண்டு வீரர்கள் வெற்றி பெறுவதுண்டு. ஆனால் திருவட்டபுயகரத்தில் ஸேவை ஸாதிக்கும் பெருமானோ தன் திருக்கைகளில் எட்டு ஆயுதங்களையல்லவா ஏந்தியுள்ளான்! அவ்வெட்டில் ஒன்றுகூட தோல்வியுறாதபடியான வெற்றியை உடையவனல்லவோ இவன்! முதலை, நீரில் மறைந்தவிடத்தில் இலக்கு தப்பாமல் தன் திருவாழியை ப்ரயோகித்து கஜேந்த்ராழ்வானின் நெடுந்துயரைத் தீர்த்தான் ஜயசீலனான அட்டபுயகரத்தான். அப்பேர்ப்பட்ட பெருமைகளை உடைய எம்பெருமானின் பாத மூலமே நமக்கு ஆச்ரய ஸ்தானம் என்று அவன் திருவடியைத் தொழும் செயலே அடியார்களான நமக்குத் தலையாய கர்தவ்யம் என்று தலைக்கட்டுகிறார் பேயாழ்வார்.

ஸ்வாமி தேசிகனோவென்னில்:

*கஜேந்திரரக்ஷாத்வரிதம் பவந்தம் க்ராஹைரிவாஹம் விஷயைர்விக்ருஷ்ட:*
*அபாரவிஜ்ஞாநதயாநுபாவம் ஆப்தம் ஸதாமஷ்டபுஜம் ப்ரபத்யே ||*

(ஸ்ரீ அஷ்டபுஜாஷ்டகம் - 1)

என்று ஆழ்வார் பாசுரத்தை அடியொற்றி ''முதலை வாயில் அகப்பட்டுக்கொண்ட யானையை நீ விரைந்து ஓடிக் காத்தது போல உலக சுகங்கள் என்னும் முதலையின் வாயில் அகப்பட்டிருக்கும் அடியேனையும் அவ்வாறே நல்வழிப்படுத்தி ரக்ஷிக்க வேண்டும்'' என்றறிவித்து, கஜேந்த்ராழ்வானின் வ்ருத்தாந்தத்தை முன்னிட்டுக்கொண்டு அட்டபுயகரம் பெருமானின் திருவடிகளில் சரண் புகுகிறார்.

எம்பெருமான் திருவடியை சரணமாகப் பற்றுபவர்கள் பிறவியென்னும் பெரும்பாழிலிருந்து மீண்டு நித்யஸூரி நிர்வாஹகனான திருப்பாற்கடல் நாதனை அடைந்து, அவனுக்கு இடைவிடாது வழுவிலா கைங்கர்யங்கள் புரியும் பெரும் பேற்றைப் பெறுவர் என்பது மேலே சொன்ன பாசுரங்கள் மற்றும் ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸூக்திகள் மூலம் திண்ணம்.

ஸ்வாமி தேசிகனின் ஸிரஸ்ஸை யதிஸார்வபௌமனான ஸ்ரீ பாஷ்யகாரரின் திருவடிகள் அலங்கரிக்கின்றன. ஸ்வாமி தேசிகனின் திருவடிகளை நாம் ஆச்ரயிப்பதால் நமக்கு வரும் பயன் ஸ்வாமி ராமானுஜரின் திருவடி ஸம்பந்தம். மாறன் துணையடிக்கீழ் தம் வாழ்வை உகப்பவர் எம்பெருமானார். ஆதலால் அவர் மூலமாக நமக்கு ஒப்பற்றதான நம்மாழ்வாரின் திருவடி ஸம்பந்தமும் ஏற்படுகிறது. ஸ்வாமி நம்மாழ்வாரோவென்னில் எம்பெருமானின் திருவடியை தன் திருமுடியில் சூடியிருப்பவர். ஆக, ஸ்வாமி தேசிகனின் திருவடிஸம்பந்தமானது நம் அநாதியான பாபங்களை ஒழித்து, மோக்ஷ பர்யந்தமான பலனை அளித்து, ச்ரிய: பதியான ஸ்ரீமந்நாராயணின் திருவடிகளில் நம்மைக் கொண்டு சேர்க்கிறது. ஸ்வாமி தேசிகன் திருவடிகளைச் சரணடைந்து அவரிட்ட வழியில் சென்று எம்பெருமானின் திருத்தாள்களைச் சென்று சேர்வோமாக!

# Important Tenets Of Our Sampradaya (7)

## The salient ones in numbers - 2

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Some essential features of the Vedantha philosophy, with special reference to Visithaadvaitha, were delineated in the previous month. We shall now continue from where we left off.

**Three Types of Jivaathmas:** Jivaathmas can be classified into Badhdhas, Mukthas and Nithyas. **1. Badhdhas:** Those who lay inextricably bound in this world and undergo the cycle of births and deaths. **2. Mukthas:** Those who have attained Moksha through either Bhakthi or Prapathi. **3. Nithyas:** Those who permanently reside in Srivaikunta and perform infinite service to the Lord. Aadhi Sesha, Garuda and Vishvaksena are examples of Nithyas.

**Important Four (Grantha Chathustayam):** There are four works that all Srivaishnavas must learn by way of Kalakshepam. They are: **1. Sri Bhashyam:** Sri Ramanuja's commentary for sage Vyasa's Brahmasuthram. **2. Gita Bhashyam:** Sri Ramanuja's commentary for Lord Krishna's Bhagavath Gita. **3. Srimath Rahasya-thraya Saaram:** Swami Desika's treatise dealing with great tenets of our Sampradaya, leading up to the Moola Manthram, Dhvayam and Charama Sloka, the Three Great Secrets or the Esoteric Triads. **4. Bhagavath Vishayam:** ThirukKurugai-Piraan Pillaan's 6000 Padi commentary for Thiruvoymozhi.

**Four Forms of Prapathi:** Variously called as Saranaagathi, Bhara Samarpanam, etc., Prapathi can be performed in one of the four forms. They are: **1. Swanishtai:** Self-surrender performed by qualified persons. **2. Ukthi Nishtai:** Saranaagathi undertaken by persons who are generally not qualified to do the same themselves, by repeating the submissions made by an Acharya on their behalf. **3. Acharya Nishtai:** Saranaagathi performed by an Acharya on behalf of persons who are generally not qualified to do it themselves. **4. Bhagavatha Nishtai:** Saranaagathi performed by a Bhagavatha on behalf of persons who are not qualified to do it himself, usually under emergency situations.

**Significant Five (Artha Panchakam):** These are the most important things that one who is desirous of Moksha must comprehend. They are: **1. Paramaathma Swaroopam:** The essential nature of Lord Supreme. **2. Jivaathma Swaroopam:** The essential nature of the Individual Souls. **3. Virodhi Swaroopam:** The essential nature of obstructions in the way of attaining Moksha. **4. Upaaya Swaropam:** The essential nature of the means to Moksha. **5. Upeya Swaroopam:** The essential nature of the ultimate goal, the Moksha.

**Five-Session Routines of a Day (Pancha-Kaala Prakriya):** The religious chores a Srivaishnava must undertake everyday have been prescribed to be done in five distinctive sessions. They are: **1. Abhigamanam**: The prayer to the Lord that the routines for the day are performed without obstructions. **2. Upaadhaanam:** Gathering flowers, Thulasi, fruits, etc. for Bhagavath Aradhanam, the daily worship; Engaging in Kalakshepam of the great scriptures like Ithihasas, Puranas, works of Azhwars and Acharyas. **3. Ijyai:** Performing Thiruvaradhanam to the Lord as prescribed in the Saasthras. **4. Swaadhyaayam:** Chanting and familiarising of the Vedas. **5. Yogam:** Meditating upon the feet of the Lord at bed time.

**Five Instructions of Sri Ramanuja for Srivaishnavas:** Sri Ramanuja prescribed Five Kainkaryams to be undertaken by Srivaishnavas in the following order of priority, based on ability:

1. Study and preach Sri Bhashyam.
2. Study and preach Divya Prabandham.
3. Serve the Lord and Divyadesam temples by fetching flowers, making garlands, lighting lamps, etc. and serve His devotees.
4. Reflect on the esoteric meaning of the Dhvayam.

5. Live in the care and affection of a Bhagavatha.

**Six Special Qualities of Sriman Narayana:** Jnaanam (wisdom), Balam (power), Aiswaryam (wealth), Veeryam (valour), Sakthi (ability) and Thejas (radiance).

**Six Words:** The famous ‘Six Words’ obtained from Lord Varadaraja by ThirukKachi Nambigal and passed on to Bhagavath Ramanuja provided the guidelines for the latter to follow. They were:

1. That Lord Narayana is the Supreme Lord.
2. That the individual souls were different from the Supreme Lord.
3. That Prapathi is the means to attain salvation.
4. That the last remembrance of the Lord on the part of the departing soul was not necessary.
5. That Moksha can be obtained only on laying off the mortal coils.
6. That Sri Ramanuja should take refuge at the feet of Periya Nambi.

**Seven Mukthi-Kshethrams (Holy Cities of Deliverance):** Ayodhya, Mathura, Maaya, Kaasi, Kanchi, Avanthi and Dwaraka.

**Six Elements of Prapathi:**

1. Aanukoolya Sankalpam (to resolve to do what would please the Lord).
2. Praathikoolya Varjanam (to resolve to not do what would displease Him).
3. Maha Viswaasam (unswerving faith in His grace)
4. Kaarpanyam (realising one’s incapacity to do anything without His grace).
5. Gopthruthva Varanam (explicitly seeking the Lord’s mercy in granting Moksha).
6. Aathma Nivedhanam (surrendering one’s soul).

**Eight Elements of Bhakthi:**

1. Yama (moral codes).
2. Niyama (self-purification and study).
3. Aasana (posture).
4. Praanayama (breath control).
5. Prathyahara (sense control).
6. Dharana (concentration).
7. Dhyana (meditation).
8. Samadhi (realisation of deliverance).

**Nine types of Devotion (Nava Vidha Bhakthi) with respective prominent practitioner:**

1. Sravanam — Audition — Pariskhith.
2. Keerthanam — Recapitulation — Suka.
3. Smaranam — Meditation — Prahladha.
4. Paadha Sevanam — Service at the feet of the Lord — Lakshmi.
5. Archanam — Worship — Pruthu.
6. Vandanam — Salutations with praise — Akrura.
7. Daasyam — Service — Anjaneya.
8. Sakhyam — Friendliness — Arjuna.
9. Aathma Nivedanam — Surrendering oneself — Mahabali.

**Nine Steps for Srivaikunta (Moksha):**

1. Vivekam — Discriminatory Knowledge.
2. Nirvedham — Repentance.
3. Virakthi — Asceticism.
4. Bheethi — Consternation.
5. Prasaadhanam — Practising a means (to Moksha).
6. Uthkramanam — Departure of the Soul.
7. Archiraadhi — Journey through the Archiraadhi Way.
8. Divyadesa Praapthi — Arrival at the door step of Sri Vaikuntam.
9. Praapthi — Realising Moksha.

***(to be continued…)***

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners ⑦

Smt. Padmalatha Sridharan, Chennai



**Chapter - 6**

**Paradevatha Paaramaarthya Adhikaram**

We learnt about the Isvara Thathva and His Svarupam, Sthithi, Pravruthi, etc., but it is essential to establish who this Isvara is (which Devatha) in a specific manner. Otherwise, we cannot be a Paramaikanthi (one who worships only Paramatma for Himself) and thus attain Moksha without delay. As already mentioned in Praapthi Virodhi part, if we worship Devathas who are also Jeevas like us, it will lead us astray.

Swami condemns other philosophies here, saying there are basic irremovable differences in the Svarupa of Jeevas and Isvara as learnt earlier, and hence it is foolish to aver that all Jeevas are manifestations of one Brahmam clothed by maya (Advaitha). Similarly, there are basic differences in the Svabhavam (Dharma Bootha Gnanam) between Devathas themselves as evidenced by their experiences of pleasure and pain and hence, Brahma, Rudra, Indra, etc., are not the same as Isvara who is Sriman Narayana.

As per Pramanas (scriptural authorities), Sriman Narayana is the cause for the Devathas, He is Himself in the midst of the Trinity, Brahma, Vishnu, Siva, and is both the material cause & creator of all worlds. Hence, these averments "All three Gods are equal", "All three Gods are one", "There is an Ultimate entity above these three Gods", "Brahma is Isvara", "Rudra or Siva is Isvara," are to be condemned.

Swami then proceeds to give countless Pramanas to emphasise this. Swami doesn't quote Sruthi in this Grantha because it can be learnt by ladies too. Hence, he gives numerous quotes from Smruthis, Puranas and Ithihasas.

Here is a summary of concepts as evidenced by these Pramanas.

1. All Devathas like Brahma, Rudra, etc., are subject to Bhagavan's Maya and their Svabhava (Dharma Bootha Gnanam) is subject to contraction and expansion like other Jeevas.
2. They get their authority from Bhagavan and act as per His will.
3. They do not have Divya Mangala Vigraham, which can be meditated upon, unlike Bhagavan. Their Sareerams are also of Trigunam.
4. They are subservient to Bhagavan and are part of His Vibuthi (wealth) and He is the owner and controller.
5. They are His attributes (All Jeevas are His attributes). Hence there is no difference in Svarupa between them and other Jeevas and the difference lies only in Dharma Bootha Gnanam (due to Karma Phalan).
6. They are his Sareeram (all Chethanam and Achethanam are His Sareeram).
7. Those Jeevas, subject to Bhagavan's Kataksham (divine glance) while they were in foetal form, become Mumukshus desiring

Moksha and those Jeevas blessed by Brahma, Rudra, etc., indulge in Rajasic and Thamasic activities.

8. Hence Mumukshus should not worship these Devathas. Only Sriman Narayana has to be worshipped for Moksham.

9. Swami clarifies upon a Sloka which holds that one who is Suryabhaktha in seven Janmas becomes a Rudra Bhaktha, one who worships Rudra in seven Janmas is born as Vishnu Bhaktha and one who worships Vishnu in seven Janmas attains Him. This holds good only if, he doesn't hold all Thathvas as equal, or as the same, or has misconceptions regarding their Svarupa or has hatred upon Isvara like Asuras, etc.

10. If a Jeeva is disturbed by misinterpretations and has Devatanthara Bhakthi (worshipping other Devathas) he is subject to Bhagavan's displeasure and it would come to harm. Bhagavan ensnares some Jeevas into worshipping other Devathas by ensuring immediate temporary benefits for such worship while ultimately hell is their destination. This is because of their abundant sins.

11. If we worship Vishnu, He will grant us material benefits also, like wealth, etc. and this wealth will be utilised in a proper manner (Saathvik way) which would lead to Upaaya and thus to Moksham at the requested time. The analogy here is the Ganga river, the greatness of which is such that one who drinks it's water just to assuage his thirst also gets some sins to be washed away. Vishnu Bhakthi even if done for material benefits, gradually will lead to destruction of sins and will direct us towards Upaaya. Hence, other gods have to be worshipped only by those who do not want to attain Moksha. Bhagavan is the Sareeri of all Devathas and even if we get benefits from other Devathas, it is He who grants them through them. If a Jeeva has this knowledge but desires some immediate benefits from other Devathas, he could worship them. But even for other material benefits, it is better to ask Bhagavan Himself.

12. Swami quotes Azhwar Srisukthis to emphasise this Paradevatha Paaramaarthyam and thus, only Sriman Narayana has to be surrendered unto and explains how this is set out in the three Manthras.

13. Just like Bhagavath Bhakthi extending up to Bhagavatha Bhakthi, Devatanthara Thyagam (to let go of) should extend upto the Thyagam of those worshipping Devatantharam.

14. Thus, the Divya Dhampathi of Piratti and Perumal are the means (Upaaya) and the end (Praapyam) as shown by Rishis and Azhwars and our Acharyas.

*(to be continued…)*

**ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு**

பித்ரு காரியங்கள் செய்வதற்கு,
சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச்
சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள்
வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.



# *With Pranams:*

**G. Adhiseshan**
129 (Old No. 56), Luz Church Road,
Mylapore, Chennai - 600 028.

**SVDD thanks Sri G. Adhiseshan**
for sponsoring this month's issue of Desika Sandesam










பவித்ரோத்ஸவம் - ஸ்ரீமத் அழகியசிங்கர் மங்களாசாஸனம்











ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம் - ஸ்ரீ வேதாந்த நாயகி